மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 10
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
हन्ड्रड विल्लज मिनिस्ट्री
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஆகஸ்டு 2011**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர




**TVGM - 2011 ஆகஸ்டு**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**எனக்குப்
பயப்படும் பயத்தை
உனக்கு
முன் செல்லும்படி
செய்வேன்.**

**யாத்திராகமம் 23 : 27.**

**கர்த்தருடைய கிருபையினால் 19.06.2011** ஞாயிறு அன்று



**அபுதாபி அப்போஸ்தல சபை சகோ. ஜான் செல்வராஜ், ஜேடார்பாளையம் FAM சர்ச் கல்வெட்டை** ஜெபத்துடன் திறந்து தேவசெய்தியளித்தார்கள்.

**A.A.C ஸ்தாபகரும் , தலைமைப் போதகருமான** ***Dr.Rev. J.A. Rajkumar*** குடும்பத்தினருக்காக விசேஷஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

நன்றி : Abudhabi Apostolic Church - Congregation U.A.E

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி
Cell : 94449 80445



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
Cell : 94435 44628

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே !*

*உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!*

*இன்று வரையிலும் நம்மை சுகத்தோடு, பெலத்தோடு காத்துக் கொண்ட தேவாதி தேவனைத் துதிக்கிறேன். இன்று வரையிலும் ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும், சரீர உழைப்பினாலும் டி.வி.ஜி.எம். ஊழியத்தை தாங்கி வருகிற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.*

*கர்த்தருடைய கிருபையினால் 2011 ஜுன் 11 சனிக்கிழமை அன்று தூத்துக்குடி மாவட்டம் - நெய்விளை வட்டார "**TVGM 100-கிராம ஊழிய தரிசன முகாம்**" வெகு சிறப்பாக நடைபெற்றது. நெய்விளை வட்டார ஒருங்கிணைப்பாளர் திரு. ஞானராஜ் (புன்னையடி) அவர்கள் வெகு சிறப்பாக சகலவற்றையும் ஒழுங்கு செய்து தந்தார்கள். சகோ.எட்வர்ட் அவர்கள் வீட்டில் தங்க இடம் அளித்தார்கள். நன்றி!*

*ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தரிசன முகாம் நடத்த வாஞ்சிக்கிறோம். இதை தங்கள் பொறுப்பாக ஏற்று ஒழுங்கு செய்து தர ஆத்துமபாரமுள்ள சபை போதகரையோ அல்லது ஜெபக் குழு தலைவரையோ கர்த்தர் கிருபையாக எழுப்பும்படி ஜெபியுங்கள்.*

*கர்த்தருடைய கிருபையினால் **TVGM & TASOL** கமிட்டிக் கூட்டம் **18.06.2011** அன்று திருச்சியில் நடைபெற்றது.*

*தேவனுக்கே மகிமை !*

*கிறிஸ்துவின் பணியில்*
***ஸ்டீபன் கிறிஸ்டோபர்***

06.07.2011

# எனக்குப் பயப்படும் பயத்தை உனக்கு முன்செல்லும்படி செய்வேன்.

யாத்திராகமம் 23 : 27

வாக்குத்தத்த செய்தி : **சகோ. P.T. கிறிஸ்டோபர்**

கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, தேவ ஊழியரே, விசுவாசிகளே!

**கர்த்தர் சொல்கிறார் : யாத். 23 :27**

**எனக்குப் பயப்படும் பயத்தை உனக்கு முன்செல்லும்படி செய்வேன்.**

பொதுவாக "**என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்**" என்ற வாக்குத்தத்தத்தை அடிக்கடி உச்சரிக்கிறோம். ஆனால் தேவன் **"எனக்கு பயப்படுப்படும் பயத்தை உனக்கு முன்செல்லும்படி செய்வேன்"** என்ற வாக்குத்தத்தத்தையும் கொடுத்திருக்கிறார்.

இந்த மாதத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக நான் ஜெபித்த போது, இந்த வசனத்தை தேவன் என் கண் முன்னே கொண்டு வந்தார்.

இன்றைக்கு கிறிஸ்தவ சமுதாயத்திலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் "**கர்த்தருக்குப் பயப்படுதல்** " மிக மிகக் குறைவாக காணப்படுகிறது. ஊழியக்காரனாகிய நானே என்னுடைய ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது மிக மிக குறைவுள்ளவனாக இருப்பதைக் காண்கிறேன். அப்படி யானால் விசுவாசிகளும், அவிசுவாசி களும் எங்கே நிற்பார்கள் ?

இந்த மாதத்தில் கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் ஒரு மனிதனுக்கு பிறந்தது முதல் மரிக்கும் வரையிலும் தேவையான வாக்குத்தத்தமாகவே இருக்கிறது.

இந்த வாக்குத்தத்தத்தை அனுபவித்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற கர்த்தரே கிருபை புரிவாராக.

**"கர்த்தருக்குப் பயப்படுகிறவன்"** – என்று நற்சாட்சி பெற்ற **6 பேரை** உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

**1. ஆபிரகாம் :**

தேவன் ஆபிரகாமைப் பார்த்து கூறுகிறார் : **ஆதி. 22 : 12**

பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை **உன் புத்திரன்** என்றும், **உன் ஏகசுதன் என்றும் பாராமல்** எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ **தேவனுக்குப் பயப்படுகிறவன்** என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

'**உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்த படியினால்**' என்ற வார்த்தையை கவனித்துப் பாருங்கள்.

நமக்குள்ள பிரதானமான ஒரே ஆசீர்வாதத்தைக்கூட கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க ஆயத்தமாக இருப்பது தான் **தேவனுக்குப் பயப்படும் பயம் .**

ஆபிரகாம் **"விசுவாசிகளின் தகப்பன்"** என்ற பட்டப்பெயரை சாதாரணமாக பெற்றுக் கொள்ள வில்லை. இன்றைக்கு பாஸ்டர் பட்டம், பிஷப் பட்டங்கள் எல்லாம் சாதாரணமாக மலிந்து விட்டது. தகுதியற்றவர்கள் கூட ஏதோ ஒரு முறையில் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் ஆபிரகாம் பெற்ற பட்டம் தேவனால் கொடுக்கப்பட்டது.

**2. யோசேப்பு :**

யோசேப்பு தன்னைக் குறித்து சாட்சிக் கொடுக்கிறார். **ஆதி. 42 : 18** யோசேப்பு அவர்களை நோக்கி : நான் **தேவனுக்குப் பயப்படுகிறவன்.**

**3. ஒபதியா :**

வேதம் சொல்கிறது : **1ராஜா. 18 : 3** ஒபதியா **கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான்.**

**4. புருஷனைப் பற்றி தீர்க்கதரிசி மனைவியின் சாட்சி :**

**2 ராஜா. 4 : 1** தீர்க்கதரிசி களுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரி எலிசாவை பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் **கர்த்தருக்குப் பயந்து நடந்தான்** என்பதை அறிவீர்.

**5. யோபுவைப் பற்றி சாட்சி :**

**யோபு 1 :1** யோபு உத்தமனும் சன்மார்க்கனும், **தேவனுக்குப் பயந்து** பொல்லாப்புக்கு விலகுகிற வனுமாயிருந்தான்.

**6. கொர்நெலியு : அப் . 10 : 2** அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டார னைவரோடும் **தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து**, ஜனங்க ளுக்கு மிகுந்த தருமங் களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்.

வேத பக்தர்களின் வரிசையில் நீங்களும் நானும் **"கர்த்தருக்குப் பயந்தவன்"** அல்லது **பயந்தவள்** என்ற நற்சாட்சியை பெற கர்த்தர் உதவி செய்வாராக.

**கர்த்தருக்குப் பயப்படுவதினால் கிடைக்கும் 7 ஆசீர்வாதங்கள் :**

**1. ஞானத்தின் ஆரம்பம்.**

நீதி. 1 : 7 கர்த்தருக்குப் பயப்படுதலே **ஞானத்தின் ஆரம்பம்.**

**2. கர்த்தரின் வழியை அறியலாம்:**

சங். 25 : 12 கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் **தாம் தெரிந்து கொள்ளும் வழியை போதிப்பார்.**

**3.கர்த்தரின் இரகசியம் அறியலாம்:**

சங்.25 : 14 **கர்த்தருடைய இரகசியம்** அவருக்குப் பயந்தவர் களிடத்திலிருக்கிறது.

**4.சத்துருவின் கைக்கு தப்பலாம்:**

**2 ராஜா : 17 : 39** உங்கள் தேவனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக; அப்பொழுது அவர் **உங்கள் எல்லாச் சத்துருக்களின் கைக்கும் உங்களைத் தப்புவிப்பார்.**

**5. தூதனால் விடுவிக்கப்படலாம் :**

சங். 34 :7 கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களை சூளப் பாளையமிறங்கி, அவர்களை **விடுவிக்கிறார்.**

**6. மரணக் கண்ணிக்குத் தப்பலாம்:**

நீதி. 14 :27 கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று. அதினால் **மரணக் கண்ணிக**ளுக்குத் தப்பலாம்.

**7. ஆயுசுநாட்கள் பெருகும் :**

நீதி. 10: 27 கர்த்தருக்குப் பயப்படுதல் **ஆயுசுநாட்களைப் பெருகப்பண்ணும்.**

**குடும்ப ஆசீர்வாதம் :**

**சங். 128** ஐ வாசித்துப் பார்த்தால் **கர்த்தருக்குப் பயப்படுகிற** ஒரு மனிதனுடைய குடும்பம் எப்படி ஆசீர்வதிக்கப்படுகிறது என்பதை பின்வரும் வசனங்களில் காணலாம்.

**1. கையின் பிரயாசத்தை சாப்பிடுவாய்**

சங். 128 : 2 **உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்;** உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

**2. மனைவி கனிதரும் திராட்சை :**

சங். 128 : 3 உன் மனைவி உன் வீட்டோரங்களில் **கனிதரும் திராட்சக் கொடியைப்** போல் இருப்பாள்;

**3. பிள்ளைகள் ஒலிவ மரக் கன்று:**

சங். 128 : 3 உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் **ஒலிவ மரக் கன்றுகளைப்** போல் இருப்பார்கள்.

**4. சந்ததியின் ஆசீர்வாதம் :**

**சங். 128 : 6 உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்** ...... சமாதானத்தையும் காண்பாய்.

**5. எருசலேமின் வாழ்வு:**

சங். 128 : 5 நீ ஜீவனுள்ள நாளெல்லாம் **எருசலேமின் வாழ்வை** காண்பாய்.

**6. பிள்ளைகளுக்கு அடைக்கலம் :**

நீதி. 14: 26 கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு திடநம்பிக்கை உண்டு; அவன் **பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்.**

ஆதலால் பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

"**கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை எனக்கு முன்செல்லும்படி செய்வார்**" ஆமென்.

அடிக்கடி அறிக்கை செய்யுங்கள்.

**உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

**பக்தன் பாடுகிறார் :**

***ஆதலால் என் உள்ளமே***
***சதா அவர் சமுகம்***
***தினம் நேசரையே துதித்திடட்டும்.***
***கர்த்தருக்குப் பயந்து***
***அவர் வழி நடந்தால்***
***நீ பாக்கியம் கண்டடைவாய்.***

பாடுங்கள்.பாடிக் கொண்டேயிருங்கள். கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் சபை மக்களுக்கும் கர்த்தரேக் கட்டளையிடுவாராக.

**என் அன்பு சகோதர, சகோதரிகளே!**

**மத். 10:28** ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; **ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.**

அப்பொழுது **மல்கியா 4 : 2**

என் நாமத்திற்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் **நீதியின் சூரியன் உதிக்கும்.**

**நம்முடைய கடமை : பிர.12 : 13**

காரியத்தின் கடைத் தொகையை கேட்போமாக. **தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்.** எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.

**ஞாபக புஸ்தகம் :**

**மல்கியா 3 : 16** கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார். **கர்த்தருக்குப் பயந்தவர்**களுக்காகவும், அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.

**தேவனுக்கே மகிமை !**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# சேலம் மாவட்டம் - கொளத்தூர் யூனியன்
# 100 - கிராம ஊழியம்

**<u>நோக்கம்:</u> 2011 ஆகஸ்டு 15** திங்கள் காலை 9 மணி முதல் **ஆகஸ்டு 19** வெள்ளி இரவு 10 மணி முடிய **கொளத்தூர் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் :2011 ஆகஸ்டு 15** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 ஆகஸ்டு 19** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 ஆகஸ்டு 15 - 19 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

## உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o.G.F.W. **ஜெபவீடு,**
**குரும்பனூர் , குரும்பனூர் போஸ்ட்,**
**கொளத்தூர் வழி,மேட்டூர் டேம் தாலுகா,**
**சேலம் மாவட்டம். 636 303.**
**செல்:** 97505 95939, 94897 77442.

உதவி செய்ய முன் வந்த Pr.பால் விக்டர் ,Pr.ஜெயம் ஜோசப் அவர்களுக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***<u>பிரயாணப்படி</u> :*** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***<u>முக்கிய அறிவிப்பு</u> :*** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***<u>சகல தொடர்புகளுக்கும்</u> :*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. Ph : 0 - 431 - 2607241 , 94449 80445

# ஈரோடு மாவட்டம் - கோபி யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

ஊழியம் நடைபெற்ற தேதி : **13 . 06. 2011 முதல் 17. 06. 2011 வரை**

44கிராம ஊழியர்கள்



முதல்நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர் :
**பாஸ்டர் A. பெரியநாயகம்,**
**I.P.A.சர்ச் , கோபி.**

முதல் நாள் தேவசெய்தி கொடுத்தவர்:
**பாஸ்டர் A. பெரியநாயகம்**

ஊழியம் செய்த கிராம ஊழியர்கள் : 44
பிரித்த குழுக்களின் எண்ணிக்கை : 10
வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் : 10,520 யோவான் சுவிசேஷங்கள்
இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள் : 10,000, மற்ற கைப்பிரதிகள் : 5000
சிலுவைக்கொடிகள்:10,000, 'நம் மத்தியில் வாழ்ந்த அவர்' புத்தகங்கள்: 400
புறமதநண்பர்களின் விலாசங்கள் : 174

கடைசிநாள் ஜெபத்தில் கிராம ஊழியர்கள் கர்த்தர் கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். **பாஸ்டர் பெரியநாயகம்** தேவசெய்தி கொடுத்தார்கள். கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படி, இனிப்பு, இரவு உணவு வழங்கப்பட்டது. சகோ. பி.டி.கிறிஸ்டோபர் முதல்நாளிலும், இறுதிநாளிலும் கலந்து கொண்டு ஊழியர்களை உற்சாகப்படுத்தி ஜெபித்தார்கள்.






முதல் நாள் ஜெபத்தின்போது





கிராம ஊழியர்கள் ஜெபத்துடன் கிராமங்களுக்குள் கடந்து செல்லுதல்

**ஊழியக் குழுவினர் வழங்கிய சுவிசேஷப்புத்தகங்கள் & சிலுவைக்கொடிகள்**

குழு 1 - சகோதரிகள் : **ரூத்கலா, மணியம்மாள், தேவகிருபை, ரெபேக்கா, அன்னாள் .** 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 2 - சகோதரர்கள் : **இஸ்ரவேல் வீமன், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், சாமுவேல்** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 3 - சகோதரிகள் : **எஸ்தர், பிச்சையம்மாள், செல்லக்கனி, தெபோராள், எஸ்தர் எபிநேசர்.** 940 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 4 - சகோதரர்கள் : **நோவா, யோசுவா, ஜேசுதாசன், செல்வராஜ்.** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 5 - சகோதரர்கள் : **பிரேம்ஆனந்த், குமார், ஆசீர்பாண்டி, மைக்கேல்.** 850 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 6 - சகோதரர்கள் : **பால்ராஜ், சூசைமாணிக்கம், ஆபிரகாம், ஏசுராஜா.** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 7 - சகோதரர்கள் : **மாற்கு மாரியப்பன், செல்வராயர்பால், மகாராஜன், அந்தோணி.** 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 8 - சகோதரிகள் : **லூயிஸ் அம்மா, கிருபா பழனியம்மாள், அன்பு ராஜாத்தி, ரூபிஜெயந்தி.** 800 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 9 - சகோதரிகள் : **மரியம்மாள், அபியேல் அந்தோணியம்மா, கிளமெண்ட்ஸ்மேரி, மரியாள்** 980 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடி

குழு 10 - சகோதரிகள் : **எஸ்தர் கனகாம்புஜம், அந்தோணிமேரி, சீலா, அமிர்தம், கஸ்தூரி.** 1850 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள் சில

**கோட்டுப்புல்லாம்பாளையம்** கிராமத்தில் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்தபோது, ஒருவன் நீங்கள் யார் ? யார் உங்களை வரச் சொன்னார்கள் ? என்று அதட்டினார். நாங்கள் யாரையும் மாற்ற வரவில்லை, இயேசுவின் அற்புதத்தைச் சொல்ல வந்தோம் என்று கூறிவிட்டு கடந்து வந்தோம்.

**அளுக்குளி** கிராமத்தில் ஒரு விதவைப் பெண் வீட்டில் படுத்த படுக்கையாக இருந்த அவருடைய தாயாருக்காக நாங்கள் ஜெபித்தோம். உடனே அவர்கள் எழுந்து எங்களுடன் சேர்ந்து ஜெபித்தார்கள்.

**சூரிபாளையம்** கிராமத்தில் சுவிசேஷப் புத்தகங்களை மக்கள் சந்தோஷமாக வாங்கினார்கள். ஒரு சிலர் மட்டும் வாங்க மறுத்தார்கள்.

**அறவங்குரை** கிராமத்தில் ஊழியம் செய்தபோது, ஒரு வீட்டில் எங்களை ஜெபிக்க அழைத்தார்கள். கை கால் நடுக்கம், பயம், தூக்கமின்மையால் கஷ்டப்பட்ட ராதிகா என்ற பெண்ணுக்காக ஜெபித்தோம். கர்த்தர் சுகம் கொடுத்தார்.

**கூதாம்பி** கிராமத்தில் எங்களை தடுத்தி நிறுத்தி மதம் மாற்ற செய்ய வந்தீர்களா ? என்று போலீஸில் புகார் செய்தார்கள். போலீஸ் சுவிசேஷப் புத்தகங்களை பிடுங்கி கொண்டு இந்தப் பகுதியில் ஊழியம் செய்யக் கூடாது என எச்சரித்தார்கள்.

**பொன்னாங்காட்டுபுதூர்** கிராமத்தில் செய்த கொடுத்த சுவிசேஷப் புத்தகத்தை இரவில் படித்த சில வாலிப சகோதரிகள் இயேசுகிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு, அடுத்த நாள் காலையில் எங்களுக்கு ஊழியத்தில் உதவி செய்த அங்குள்ள விசுவாசியின் வீட்டிற்கு வந்து தங்களுடைய மனம் இயேசுவின் அன்பினால் தொடப்பட்டதை அறிவித்து சபைக்கு அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டதாக நாங்கள் அறிந்து தேவனை மகிமைப்படுத்தினோம்.

இயேசுவின் அன்பு அநேகரை தொட்டதை அவர்கள் கண்களிலிருந்து வடிந்த கண்ணீராலும், முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியினாலும் அறிந்து தேவனை மகிமைப் படுத்தினோம்.

**காந்திகரில்** சுவிசேஷப் புத்தகம் கொடுத்துவிட்டு பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருந்தபோது ஒரு தீவிரவாதி இங்கெல்லாம் இப்படிப்பட்ட புத்தகங்களை கொடுக்கக் கூடாது, இனிமேல் இங்கு வராதீர்கள் என்று பஸ்ஸில் ஏற்றி விட்டார்.

**வலையவளையம்** கிராமத்தில் ஒரு மனிதனிடம் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, அவன் எனக்கு வேண்டாம் என்று போய் விட்டான். பிறகு கொஞ்ச நேரம் கழித்து எங்களிடம் வந்து கைப்பிரதியை கேட்டு வாங்கி சென்றான்.

T.N. பாளையத்தில் ஒரு வீட்டில் யோவான் புத்தகம் கொடுத்துவிட்டு போனோம். அப்போது அங்கிருந்து ஒரு பெரிய கருநாகபாம்பு வெளியே வந்துள்ளது. இதைக் கண்ட அந்த வீட்டுக் காரர்கள் அடித்திருக்கிறார்கள். மீண்டும் மதியம் அவ்வழியாக கடந்து சென்றபோது அவர்கள் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்தபடியால் இங்கிருந்த கொடிய கருநாகபாம்பு வெளியேறியது என்று கூறினார்கள்.

இப்படியாக கர்த்தர் எங்களைப் பெலப்படுத்தி நடந்து திரிந்து கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்து இயேசுவை அறிவித்து வர உதவிச் செய்தார்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**2011 ஆகஸ்டு மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : திருச்சி
யூனியன் : முசிறி
நாள் : 27.08.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் டேவிட் J.பிரகாஷ்**
**ரிவைவல் அசெம்பிளி சர்ச்**
**77 மாணிக்க நகர்**
**அமலா ஸ்கூல் பின்புறம்**
**முசிறி - 621 211.**
**திருச்சி மாவட்டம்.**
**செல் : 99658 72765**
**97873 10301**

**TVGM Website :**
**www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி , சாட்சிப் புத்தகம், **மாதாந்திர '100 கிராம ஊழியம்'** அனுபவ சாட்சிகள், TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

**தவறாமல் பாருங்கள் !**
**ஜெபியுங்கள் !**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!**

## ஜெபத்தைக் கேட்டு தேவன் செய்த அற்புதங்களில் சில

### சுகம் கிடைத்தது !

**சகோதரி செல்லம்மாள், கோவை.** என் மருமகனுக்கு காலிலுள்ள வேதனை நீங்கி சுகம் கிடைக்க ஜெபிக்கும்படி தங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் தங்கள் ஜெபத்தைக் கேட்டு பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. செல்வராஜ், திருச்சி.** என் அக்கா பேரனுக்கு உடல் நிலை சரியில்லாதிருந்தபோது தங்களிடம் தொலைபேசி மூலம் ஜெபிக்கச் சொன்னேன். தாங்கள் ஜெபித்தீர்கள். நானும் பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் சுகம் கொடுத்தார்.

### தேர்வில் வெற்றி கிடைத்தது !

***சகோ. அன்பழகன் , வேலூர் :*** என் அண்ணன் மகள் +2 தேர்வில் 1043 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றுள்ளாள். தேவனுக்கே மகிமை !

✶✶✶✶✶

### "தமிழ்கிராமங்களுக்கு சுவிசேஷம்" பத்திரிகை வாசகர்கள் எழுதின கடிதங்களின் சில வரிகள் !

**சகோதரி கலையரசி , திருவள்ளூர்**

தாங்கள் அனுப்பும் **"தமிழ்கிராமங்களுக்கு சுவிசேஷம்"** பத்திரிகையில் வரும் ஒவ்வொரு வசனங்களும், கருத்துகளும் எனக்கு நம்பிக்கையையும், வாழ்க்கையில் உற்சாகத்தையும் அளிப்பதாக இருந்து வருகிறதை நினைத்து தேவனைத் துதிக்கிறேன்.

**சகோ. செல்வராஜ் & சகோதரி குணசெல்வி , சேலம்.**

தாங்கள் அனுப்பும் **"தமிழ்கிராமங்களுக்கு சுவிசேஷம்"** பத்திரிகை வேதத்தின் ஆழ்ந்த சத்தியங்களை அறிந்து கொள்ளவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரவும் உதவியாக இருக்கிறது.

**அன்பானவர்களே !** இதுபோன்ற அனுபவங்களை உங்கள் அருகிலுள்ள இயேசுவை அறியாத புறமதநண்பர்களும் பெற்று அனுபவிக்க வேண்டாமா ? இன்றே அவர்களும் **"தமிழ்கிராமங்களுக்கு சுவிசேஷம்"** பத்திரிகையை பெற்று பயனடைய உற்சாகப்படுத்துங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

# THE AMBASSADOR SCHOOL OF LEARNING ( TASOL )

TASOL வருங்கால திட்டங்களை செயல்படுத்த நிலம் இன்றியமையாததாகும். இந்தியா தேசத்தின் பல மாநிலங்களிலிருந்து பல பாஷைக்காரர்கள் ஒன்றுகூடி Civil Service பயிற்சியுடன் கிறிஸ்தவ தலைமைத்துவப் பயிற்சிகளையும் பெற வேண்டும் என்ற தொலை தூர தரிசனத்துடன் TASOL திட்டம் வளர்ச்சி பெற்று வருகிறது. 12A, 80G ஆர்டர்களை கர்த்தர் கிருபையாக கட்டளையிட்டதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

நம்முடைய பெரும் தேவை நிலத்திற்குரிய ரூ. 30,00,000 ஆகும் கர்த்தர் கிருபையாக மூன்று பேர் மூலம் ரூ. 3,00,000 கட்டளையிட்டுள்ளார்.

**மீதி தேவை ரூ. 27,00,000 ( 27 லட்சம் ) சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**

***இந்த உயர்ந்த லட்சியத்தில் உங்கள் பங்கு என்ன ?***

**TASOL** SB A/c No : **1249101038110** Canara Bank, Puthur, Trichy.

## TVGM சிறுவர் இல்லம் - குண்டல்

கர்த்தருடைய கிருபையினால் குண்டல் சிறுவர் இல்லப் பிள்ளைகள் யாவரையும் 2010–2011ம் கல்வியாண்டில் கர்த்தர் பாதுகாத்துக் கொண்டார். விசேஷமாக 2011ம் ஆண்டு சமூகநலத் துறையில் இருந்து சிறுவர் இல்லத்திற்கு **அரசு அங்கீகாரம்** கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். மேலும் அனைத்து பிள்ளைகளும் இந்த கல்வியாண்டில் **தேர்ச்சி பெற** கர்த்தர் கிருபை செய்தார். குண்டல் சிறுவர் இல்லப் பிள்ளைகளை நினைவுகூர்ந்து

**உணவு, இனிப்பு, துணி, நோட்டு கொடுத்து உதவியவர்கள் :**

சகோ. மைக்கேல் ராயப்பன் – நந்தன்குளம்( M.L.A), சகோதரி கமலம் – காரிகோவில், சகோதரி புஷ்பம் – குண்டல் , சகோதரி புஷ்பம் – சென்னை, சகோதரி டெய்சி இன்பநாயகம் – நவலடி, சகோ. ராஜராஜன் – நவலடி, சகோ. சாமுவேல்ராஜ் – கோடாவிளை, சகோ.பிரபு – கூடன்குளம், சகோதரி பாப்பா – மும்பை, சகோதரி சோபியா – குண்டல், சகோ. குணசிங்துரை – குண்டல், சகோதரி ரெஜினா ஜெயசிங் – விழுப்புரம், சகோ. ஜேக்கப் – திசையன்விளை, சகோதரி ராணி தேவதாஸ் – ஈத்தாமொழி, சகோ. ஜெயபால் – திசையன்விளை( ஒன்றிய செயலாளர் ) சகோ. தாமஸ் – குண்டல்,

**குண்டல் இல்லத்திற்கு TVS வாங்க உதவி செய்தவர்கள் :**

சகோதரி சாந்தா ஜெயபால் – பெங்களூர், சகோதரி ஜூடி – குண்டல், சகோ. ரெத்தினம் – குண்டல், சகோ. பிரபு – கூடன்குளம்

மேலும் குண்டல் இல்லத்திற்கு காணிக்கை கொடுத்து உதவி வருகிற அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

2011 – 2012 கல்வியாண்டிற்கான தேவைகளுக்காக **ஜெபியுங்கள்.**

**திரு. மனோகரன் ஆசிரியர்**
ஒருங்கிணைப்பாளர்
தொலைபேசி : **04637 272664**
மொபைல் : **94864 81522**

**திரு. ரத்தினம் ஆசிரியர்**
மேனேஜர்
தொலைபேசி : **04637276306**

**தலைமை அலுவலகம் : 0431- 2607241**

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலக ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் ஜுன் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றன. தூத்துக்குடி மாவட்டம் – **நெய்விளை வட்டார "TVGM 100– கிராம ஊழிய தரிசனமுகாமில்"** சாட்சிக் கூறி, பாடல் பகுதியை நடத்த, **3** சகோதரிகளாகச் சென்று வர கர்த்தர் கிருபை செய்தார்.

**கன்னங்குளம்** பகுதியில் வீடுகளை சந்தித்து அறிமுகப்பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இறுதி ஞாயிறன்று **மார்த்தாண்டம் – கன்னக்கோடு LMS சபை**யிலும், அதே பகுதியிலுள்ள பாஸ்டர் மோகன் அவர்களது **பெத்தேல் சபையிலும்** அறிமுகப்பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஊழியத்தை ஆதரித்து, யாவரையும் அன்புடன் உபசரித்த **Rev. டேவிட் தம்பிதாஸ்** மற்றும் **பாஸ்டர் மோகன்** குடும்பத்தை கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக.

**சுபாஷ்நகர்** பகுதியில் சுவிசேஷ ஊழியங்கள் நடைபெற்றன. தொடர்ந்து அறிமுகப்பணி, சுவிசேஷ ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**தேவனுக்கே மகிமை!**

கிறிஸ்துவின் பணியில்,
N. **ஷோபனா இவான்சலின்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
செல்: **98658 26424** **தலைமை அலுவலகம் : 0431 - 2607241**

## TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - சோமரசம்பேட்டை



TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு தங்களுடைய பிறந்தநாள், திருமணநாள் மற்றும் முக்கிய தினங்களில் சிறப்பு உணவு வழங்கிய சகோ. தைரியராயர், பாஸ்டர் பிரசாத், சகோதரி பாத்திமா, சகோ. செல்வராஜ், சகோதரி பெல்லா, சகோ. கிஷோர்குமார், சகோ. செல்வராஜ் (அபுதாபி ), சகோ. ஆரோக்கியராஜ் மற்றும் இனிப்பு வழங்கிய சகோதரி சங்கீதா, சகோதரி ஈவ்லின் ஆகியோருக்கு நன்றி !







சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கிய திருச்சி – சகோ. ஜனா (பிரின்ஸ் டெய்லர்ஸ்) , சகோ. ஸ்டீபன் ரெபேக்கா மற்றும் **யூனிபாா்ம்** வழங்கிய சகோ. செல்வராஜ் ( அபுதாபி அப்போஸ்தல சபை) அவர்களுக்கும் நன்றி !

# SRI LANKA VILLAGE GOSPEL MISSION

124 / 3, Nursing Home Road, Hatton , Sri Lanka. 0094512222489

News Letter August 2011 By ... *Rev. John Isaiah.*



**அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,**

இயேசுவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

**கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸின் ஆவியை ஏவினதினாலே அவன் ... எருசலேமின் வாசம் பண்ணுகிற தேவனே தேவன்.** எஸ்றா 1 :1 – 3.

தேவனுடையஆவி கோரேஸ¨டைய இருதயத்தை ஏவினதினாலே பின்வரும் சம்பவங்கள் அவனுடைய ராஜ்யத்திலே நடந்தது. தேவனுடைய பிள்ளைகள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்படி எழும்பினார்கள் ( 1: 5 ), அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற யாவரும் அவர்களுக்கு காணிக்கைகளையும், பொருட்களையும் கொடுத்து அவர்கள் கைகளை திடப்படுத்தினார்கள் ( 1 : 6 ), யூதத் தலைவர்கள் தங்கக்காசுகளையும், வெள்ளிகளையும், ஆசாரிய வஸ்திரங்களையும் கொடுத்தார்கள் ( 2 : 69 ), ஜனங்கள் ஏகோபித்து எருசலேமிலே கூடினார்கள் ( 3 : 1 ), தேவனின் பலிபீடத்தைக் கட்டத் தொடங்கினார்கள் ( 3 : 2 ), சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினார்கள் ( 3 : 3 ), கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைத்தார்கள் ( 3 : 8 ), ஒருமனப்பட்டு நின்றார்கள் ( 3 : 9 ), ஆசாரியரையும் லேவியரையும் நிறுத்தினார்கள் ( 3 : 10 ), கர்த்தரைப் பாடித் துதித்தார்கள் (3:11), கட்டி முடித்தார்கள் ( 6 : 14 ), கடைசியாக கர்த்தர் அவர்கள் இருதயத்தை மகிழ்ச்சியினால் நிரப்பினார் ( 6 : 22 ).

இதைப் போல, தேவனுடைய ராஜ்யத்தை இலங்கையிலுள்ள அறியப்படாத இடங்களில் ஸ்தாபிக்க பரிசுத்த ஆவியானவரே நம்முடைய இருதயங்களை அசைத்து நாம் இந்தக் காரியத்திற்கு உதவவும், கொடுக்கவும், கூடவும், கட்டவும், தியாகம் செய்யவும், வேலை செய்து மேற்பார்வை பார்க்கவும், ஒருமனப்படவும், துதித்துப் பாடவும், கடைசியாக **இயேசுகிறிஸ்துவே கர்த்தர்** என்று நமது இலங்கை மக்கள் உணர்ந்துகொள்வதை நாம் கண்டு மகிழ வேண்டும்.

## 100 - கிராம ஊழியம் - ரக்வானா :

2011 ஜ¨ன் 30 முதல் ஜ¨லை 2 வரை சுவிசேஷப் பிரதி விநியோக நிகழ்ச்சியை பாஸ்டர் பிரபா ரக்வானா போதகர் ஐக்கியத்தின் தலைவரும் , Pr. ருசல் பர்ணான்டோ உதவித் தலைவரும் இணைந்து ரக்வானா A.O.G சபையில் ஒழுங்குப்படுத்தி தந்தார்கள். 28 தன்னார்வத் தொண்டர்கள் A.O.G, ஐக்கிய பெந்தெ கோஸ்தே,7ம் நாள் ஓய்வு, ஆங்கிளிக்கன் சபையிலிருந்து பங்கு பெற்றார்கள்.

ஒரு மாதத்திற்கு முன்னால் A.O.G பாஸ்டர் இரவு நேரத்தில் வீட்டிற்கு திரும்பும்போது ஒரு கூட்டத்தினர் பயமுறுத்தி அவருடைய மோட்டார் பைக்கை சேதப்படுத்தி, அந்தப் பகுதியில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்கக் கூடாது என எச்சரித்தும் அனுப்பினார்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அதேப் பகுதியில் 2782 கைப்பிரதிகளும், 678 சுவிசேஷப் புத்தகங்களும் விநியோகிக்க கர்த்தர் கிருபை செய்தார். 88 விலாசங்கள் பின்தொடர்பணிக்காக சேகரிக்கப்பட்டது.



## 100 - கிராம ஊழிய சாட்சிகள் :

**V. Dias Deeban "B" Gammana - Rakwana.**

நான் ஒரு பாவியாக இருந்தேன். இயேசு என்னை இரட்சித்தார். அதிலிருந்து எனக்கு இரட்சிப்பை பகிர்ந்து கொள்ள ஆசையாக இருந்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 100–கிராம ஊழியத்தின் மூலமாக அநேக மக்களுக்கு சாட்சியாக இருக்க ஒரு வாய்ப்பை கர்த்தர் கட்டளையிட்டார். நான் 3 நாட்களாக எஸ்டேட் பகுதிகளிலும், கிராமங்களிலும் கைப்பிரதிகளையும், சுவிசேஷப் புத்தகங்களையும் விநியோகிக்க கர்த்தர் கிருபை செய்தார். மக்கள் வாஞ்சையோடு சுவிசேஷத்தைக் கேட்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

***N. Chandraleka , Kotala :***

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். 2 நாட்கள் 100–கிராம ஊழியத்தில் கலந்து கொள்ள கர்த்தர் வாய்ப்பளித்தார். ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்பதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். சிலர் தங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். ஒரு குடும்பத்திற்காக ஜெபித்தபோது கண்ணீர் வடித்தார்கள். நான் தேவவல்லமையை உணர்ந்தேன். இப்பொழுது இப்படிப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து ஜெபிப்பதற்கு கர்த்தர் ஒரு பாரத்தைக் கொடுத்துள்ளார்.

***V. Mariadas , Madampe Rakwana :***

கடந்த 2 வருடங்களாக அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு கஷ்டப்பட்டேன். இரவு, பகல்களை தனியான இடத்திலும், கல்லறைத் தோட்டத்தில் கூட இருந்தேன். என்னுடைய பெற்றோர் பல சிகிச்சைகளை அளித்தார்கள். அத்துடன் கோவில்களுக்குக் கூட்டி சென்று பூஜைகளை செய்தார்கள். ஆனாலும் சுகம் கிடைக்கவில்லை. ஜுன் 30 அன்று என்னுடைய சகோதரர்கள் என்னை ஒரு தேவாலத்திற்கு ஜெபிப்பதற்காக அழைத்து சென்றார்கள். அப்பொழுது அந்த ஆலயத்தில் ஒரு ஜெபக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தின் முடிவில் என்னுடைய ஆலயத்தின் மத்தியில் வர செய்து, என்னை வட்டமாக சூழ்ந்து எனக்காக ஜெபித்தார்கள். ஏதோ எனக்குள் ஏற்பட்டு என்னுடைய சரீரத்திலும், மனதிலும் ஒரு பெரிய விடுதலையை உணர்ந்தேன். என்னை வீட்டிற்கு போய் விட்டு மறுபடியும் ஞாயிற்றுக் கிழமை அன்று சபைக்கு வரச் சொன்னார்கள். அவர்கள் இயேசுவின் அன்பைப் பற்றி சொல்வதற்கு கிராமங்களுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களோடு செல்ல உந்தப்பட்டு மூன்று நாட்கள் கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளோடு நடந்து திரிந்து இயேசுவை உண்மையான தெய்வம், குணமாக்குபவர் என அறிவித்தேன். இயேசு எனக்கு விடுதலைக் கொடுத்து, அதே நேரத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் உதவிச் செய்தார். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இது எனக்கு ஒரு அற்புதமாக அனுபவம்.

உங்கள் ஜெபம், ஆதரவு, உதாரத்துவமான காணிக்கைகளுக்காக நன்றி செலுத்துகிறோம். **தேவனுக்கே மகிமை !**

**Bro. P.T. Christopher** (Founder/Patron) 0091 94435 44628
**Bro. Stephen Christopher - CEO. TVGM** 0091 94449 80445
Tamil Village Gospel Mission, Somarasampettai, Trichy - 620 102. India

# TVGM **ஏலீம் சிறுவர் இல்லம்** - V.B.S.














**நன்றி :** கர்த்தருடைய கிருபையினால் 2011 ஜுன் 2,3,4 ஆகிய தினங்களில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு தன் சொந்த செலவில் **பாஸ்டர் பிரசாத் தேவசித்தம்** (திருச்சி )அவர்கள் தனது குழுவினரோடு வந்து VBS நடத்தி சிறப்பு விருந்தளித்தார்கள்.

## முக்கிய அறிவிப்பு

நீங்கள் அனுப்பும் காணிக்கைகளுக்கு, இந்தியாவில் உள்ளவர்களுக்கு 15 நாட்களுக்குள்ளும், வெளிநாட்டில் வசிப்பவராக இருந்தால் 30 நாட்களுக்குள்ளும் TVGM லிருந்து காணிக்கை ரசீது வந்து உங்கள் கையில் கிடைக்காவிட்டால் தயவுசெய்து உடனே முழு விபரமாக பணம் அனுப்பியதற்குரிய அத்தாட்சியுடன் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

நீங்கள் கனரா பேங்க் அக்கவுண்டிற்கு நேரடியாக பணம் அனுப்பினால் தயவு செய்து உங்கள் முழு முகவரி, தொலைபேசி , ஈமெயில், காணிக்கை அனுப்பிய நோக்கம் யாவையும் தெளிவாக எழுதி தபால் மூலமாக அல்லது TVGM ஈமெயில் 100village@tvgm.org க்கு தெரியப்படுத்துங்கள்.

அவ்வப்போது உங்கள் ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்புங்கள். ஜெபிக்கிறோம். கர்த்தர் பதிலளிப்பார்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**"நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது". தானி.** 9:23

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** TVGM Trus FCRA Registration - க்காக கடந்த 4 வருடங்களாக ஜெபித்து முயற்சித்து வருகிறோம். கர்த்தர் கிருபையாக ஆர்டரை கட்டளையிட ஜெபியுங்கள். மேலும் 3வது Prior Permission க்கு விண்ணபித்தும் கடந்த ஓராண்டு காலமாக அனுமதி கிடைக்கவில்லை. ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** 100–கிராம ஊழியம் தமிழ் பத்திரிகையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தர தன்னார்வத் தொண்டர்களை கர்த்தர் தரும்படி ஜெபியுங்கள்.

***புதன் :*** 2010 - 2011 நிதியாண்டிற்கான TVGM Trust, TVGM Social, TASOL ஆகிய 3 Trust களின் வரவு, செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருமானவரி அலுவலகத்தில் சமர்பிக்கப்பட ஜெபியுங்கள்.

***வியாழன் :*** TVGM ன் மாதாந்திரத் தேவைகள் அந்தந்த மாதத்தில் சந்திக்கப்பட ஜெபியுங்கள். குறிப்பாக 4 லட்சம் யோவான் சுவிசேஷப் புத்தகத் திற்குரிய பணத்தை IBL ஸ்தாபனத் திற்கு செலுத்தி முடிக்க ஜெபியுங்கள்.

**ஒரிஸாவில் 1** லட்சம் கைப் பிரதிகள் விநியோகிக்கப்பட ஜெபியுங்கள்.

***வெள்ளி :*** TVGM ஏலீம் சிறுவர் இல்ல கட்டடத்தின் மூன்றில் இரண்டு பகுதி வேலை முடிக்க முடியாமல் உள்ளோம். குறிப்பாக 8 குளியலறை, 8 கழிவறை சீக்கிரத்தில் கட்டி முடிக்கப் பட ஜெபியுங்கள்.

சிறுவர் இல்லப் பிள்ளைக ளுக்கு ஸ்கூல் பீஸ் உத்தேசமாக **ரூ.40,000/–** கட்டுவதற்கான பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப் படவும் ஜெபியுங்கள்.

***சனி :*** TVGM தலைமை அலுவலகத் தில் அக்கவுண்டு எழுத அனுபவ முள்ள Tally அல்லது அதற்கு சமமான கணக்குகள் படித்தவர்களை கர்த்தர் கட்டளையிட ஜெபியுங்கள்.

தமிழ், ஆங்கிலம் வேகமாக கம்ப்யூட்டரில் டைப், போட்டோஷாப், இன்டர்நெட் தெரிந்தவர்களையும் கர்த்தர் கட்டளையிட ஜெபியுங்கள்.

சமையல், காவல்பணி, தோட்டப் பணி, டெம்போ டிராவல் டிரைவர், வார்டன் சேவைக்கு அர்ப்பணித்த வர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** தங்கள் ஊரில் TVGM பிரதிநிதியாக இருந்து அறிமுகம் செய்ய ஆத்துபாரமுள்ள தன்னார்வத் தொண்டர்களை கர்த்தர் எழுப்ப ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை அனுப்பவும் மற்றும் சகல தொடர்புகளுக்கும் : -

TVGM தலைமை அலுவலக முகவரி
BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
1OO-VILLAGE,
SOMARASAMPETTAI ( Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org
Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628

டிராப்ட் , செக், Bank to Bank அனுப்ப வேண்டிய முறை

Canara Bank , Code No: 1249, Puthur Branch, Trichy - 620 017

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| 100 கிராம ஊழியம், சுவிஷேப் புத்தகம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர். | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Origin<br>SB. A/c : **12491010 -11947** Foreign National |
| **சிறுவர் இல்லம்:** பிள்ளைகள் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், தையற்பள்ளி, மருத்துவ நிதி ஏழை, எளியவர் உதவி | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Origin<br>SB. A/c : **12491010 - 24967** Foreign National |
| பிள்ளைகளின் **உயர் கல்வி நிதி** TASOL **நிலம்** | **TASOL** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 38110** Indian Origin |

| ஸ்தாபனத்தின் பெயரில் அனுப்ப முடியாவிட்டால் | Stephen Christopher<br>SB. A/c : **12491010 - 18538** |
|---|---|

**குறிப்பு :** காணிக்கை அனுப்பும்போது நோக்கம், உங்கள் முழுமுகவரி, தொலைபேசி, ஈமெயில் யாவும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்ட்ரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனி

மருத்துவ உதவி



தொழுநோயாளிக்கு ஜெபித்தல்



தொழுநோயாளர் / ஏழைகள் 6 பேருக்கு வீடு கட்டி கொடுத்தல் – ஜூன் 2011



நன்றி !
*Bro. Geoff*
*Sis. June*
Wigan



To

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.